# PAST STUDENTS' ASSOCIATION – COLOMBO

# J/CHITHAMBARA COLLEGE VALVETTITURAI

## FINANCIAL STATEMENTS

## FOR 2018, 2019 AND 2020

பழைய மாணவர் மன்றம் – கொழும்பு
யா/சிதம்பரக் கல்லூரி, வல்வெட்டித்துறை
PAST STUDENTS' ASSOCIATION - COLOMBO
J/ CHITHAMBARA COLLEGE, VALVETTITURAI
215, D,2/8, Park Road, Colombo 05, Sri Lanka.

18.06.2023

அன்புடையீர்!

## கணக்கறிக்கை 2018, 2019, 2020.

சிதம்பரக் கல்லூரியின் தரத்தை பேணும் மற்றும் மேம்படுத்தும் நோக்கில் எமது மன்றம் வல்வை பழைய மாணவர் மன்றத்துடன் இணைந்து பல செயற்பாடுகளை செய்து வருவது நீங்கள் அறிந்ததே. இந்த வகையில் இக்கணக்கறிக்கையை சமர்ப்பிக்கும் இச்சந்தர்ப்பத்தில் இக்காலப்பகுதியில் (2018, 2019, 2020) எமது மன்றம் மேற்கொண்ட முக்கிய செயற்பாடுகளையும் உங்களுடன் பகிர விரும்புகின்றோம்.

கல்லூரியின் விளையாட்டு மைதானம் கிழக்குப்புற எல்லை தவிர்ந்த ஏனைய பக்கங்கள் எல்லைகள் அற்று வெளியாகவே காணப்பட்டது. இதனால் எவரும் எதுவித கட்டுப்பாடுகளும் இன்றி மைதானத்தை பயன்படுத்தக்கூடிய ஒரு சூழலே நிலவியது. மேலும் நாய், பூனை, ஆடு, மாடு போன்றன மைதானத்தினுள் நுழைந்து தமது எச்சங்களினால் மைதானத்தை அசுத்தப்படுத்தும் சூழ்நிலையே நிலவியது.

எனவே மைதானத்தை பாதுகாப்பாகவும், சுத்தமாகவும் வைத்திருக்கும் நோக்கில் வடக்கு, கிழக்கு, எல்லைக்களுக்கு சுற்றுமதில்களை அமைத்தும் தெற்குப்புற எல்லைக்கு கம்பிவலை அமைத்தும், மேலதிகமாக தேவையான வாயில் கதவுகளை அமைத்தும் மைதானத்தை கட்டுப்பாடாகவும், பாதுகாப்பாகவும், சுத்தமாகவும் வைத்திருக்க உத்தேசித்தோம். இதற்கான உத்தேச செலவினமாக ரூபா 2,748,860.00 மதிப்பீடு செய்யப்பட்டது. இந்நிதி உதவிக்கான கோரிக்கையை வல்வை நலன்புரிச்சங்கம் பிரித்தானியாவிடம் மேற்கொண்டோம். கணிதப்போட்டிக்குழு - வல்வை நலன்புரிச்சங்கம் பிரித்தானியா இச்செயற்திட்டத்திற்காக ரூபா 2,582,000ஐ எமக்கு தந்துதவினார்கள். ஆகையால் இச்செயற்திட்டத்திற்க்கு உதவி புரிந்த வல்வை நலன்புரிச்சங்கம் பிரித்தானியாவிற்கு எமது மன்றத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமக்கு கிடைக்கப்பெற்ற இந்நிதியின் உதவியுடன் மைதானத்தின் வடக்கு, மேற்கு எல்லை சுவர்களை அமைத்துள்ளோம். (ஆயினும் மைதானத்தைச்சுற்றி உள்ளவர்களினால் ஏற்படுத்தப்பட்ட எதிர்ப்பினால் வடக்குப்புற எல்லைச்சுவரில் 4 வரி கற்களுக்கு மேலாக வைக்க முடியாத சூழ்நிலை உருவானது). மேலும் மைதானத்தின் வடக்குப்புற எல்லையருகில் அமைந்துள்ள கிணற்றை அயல்குடியிருப்பாளர்கள் தொடர்ந்து பாவிக்கக்கூடியவாறு கிணற்று மேல் விளிம்பின் வடக்கு புறத்தில் ஒரு பகுதியை கொன்கிறீட் தளம் கொண்டு மூடியும் ஆண், பெண் குளியல்கூடங்களை புனரமைத்தும் கொடுத்துள்ளோம்.

இம்மைதானத்தை பாதுகாக்கும் செயற்திட்டத்தை பூரணப்படுத்தும் நோக்கில் மேலதிக நிதிகளை சேகரித்து தற்போது தெற்குப்புற எல்லையிலும், வடக்கு, கிழக்குப்புற எல்லைகளின் மேலாகவும் கம்பி வலை அமைக்கும் வேலைகளை ஆரம்பித்திருக்கின்றோம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

அடுத்து கல்லூரியின் முன்புறமாக அமைந்த மேல்மாடி கட்டடத்திற்குள் காகங்கள் செல்ல முடியாதவாறு யன்னல்களுக்கு அலுமினியம் கிறில்களை ரூபாய் 400,000/= செலவில் அமைத்துக் கொடுத்துள்ளோம்.

மேலும் கல்லூரி நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கும், பாதுகாப்பதற்கும் உதவியாக CCTV கேமராக்களை பொருத்துவதற்காக ரூபாய் 206,658.00 வழங்கியுள்ளோம்.

மேலும் எமது மன்றம் கல்லூரியின் பழைய மாணவர்கள் நலன் விரும்பிகளிடமிருந்து சேகரித்த பணத்தினை வங்கிகளில் நிலையான வைப்பிலிட்டு அதன் மூலம் கிடைக்கும் வட்டிப் பணத்திலிருந்தே கல்லூரியின் மீண்டெழும் செலவினங்களை ( recurrent expenditures) செய்து வருகின்றது. வங்கி வட்டி வீதம் குறைவடைந்துள்ளமையாலும் விலைவாசி உயர்வு காரணமாகவும் கல்லூரியின் நானாவித செலவினங்கள் அதிகரித்துள்ளமையாலும் கல்லூரிக்கான மீண்டெழும் செலவினங்களை செய்வதற்கு எமக்கு நிதி பற்றாக்குறையாக உள்ளது. ஆகையால் மேலதிக நிதியை கல்லூரியின் பழைய மாணவர் மற்றும் நலன் விரும்பிகள் நேரடியாகவோ அல்லது கீழ்க்காணும் மன்றத்தின் வங்கிக் கணக்கிலக்கத்திற்கோ அனுப்பி வைக்குமாறு பணிவன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

Bank Account details:

Name: PAST STUDENTS' ASSOCIATION – COLOMBO
J/CHITHAMBARA COLLEGE, VALVETTITURAI.

Name of the Bank: HATTON NATIONAL BANK-WELLAWATTE

Savings Account No. 009020103353.

வாழ்க சிதம்பரா! வளர்க அதன் புகழ்!!

அன்புடன்,

தலைவர் செயலாளர் பொருளாளர்